RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-70 | 16 மார்ச் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# நவீன கருவிகளை கண்டுபிடிப்பவர்களுக்கு முதல் பரிசு ரூ.1.5 லட்சம்! விவசாய கடன் தள்ளுபடி



சென்னை, மார்ச்.16

தமிழக சட்டப்பேரவையில் தமிழக நிதிநிலை அறிக்கை 2025 2026 (பட்ஜெட் 2025)ஐ நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ததை தொடர்ந்து எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தமிழக வேளாண் பட்ஜெட் 2025 2026ஐ தாக்கல் செய்தார்.

வேளாண் பட்ஜெட்டை 5வது முறையாக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

பேரவையில் தாக்கல் செய்துள்ள நிலையில், ஒதுக்கீடு பற்றிய விவரங்களை வெளியீட்டார்.

தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் மாநில அரசு, ட்ரோன்கள், மிஷீஜி ஆன விவசாய உபகரணங்கள், மற்றும் தானியங்கி இயந்திரங்கள் போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. எனவே, இந்த சூழலில் நவீன விவசாய கருவிகளை கண்டுபிடிப்பவர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்படும் என பட்ஜெட் தாக்கல் செய்தபோது எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார். அதன்படி, "நவீன வேளாண் கருவிகள், நவீன சாகுபடி தொழில் நுட்பங்கள் உள்ளிட்டவற்றை கண்டறிந்து, கடைபிடிப்பதில் சிறந்து விளங்கும் 3 பேரில் முதல் பரிசாக ரூ.2.5 லட்சமும், 2ம் பரிசாக ரூ.1.5 லட்சமும், 3ம் பரிசாக ரூ. 1 லட்சமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு மானிய விலையில் சோலார் பம்ப் செட்டுகள் வழங்கப்படும்.

1,000 விவசாயிகளுக்கு சோலார் பம்ப் செட்டுகள் வாங்க ரூ.15,000 மானியம் வழங்கப்படும்.

புதிய மின் மோட்டார் பம்ப் செட்டுகள் வாங்கவும், பழைய மின் மோட்டார் பம்ப் செட்டுகளை மாற்றிடவும் மானியம் வழங்கப்படும். வேளாண்மைப் பொறியியல் துறை இயந்திரங்களைப் பயன்படுத்தி, 500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தூர் வாருதல் மற்றும் 100 புதிய

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல்.300 கிராமப்புர இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக்கூட்டு மையங்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மனநிறைவு

"தமிழக விவசாயிகள் மன நிறைவு கொள்ளும் வேளாண் பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது" என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச்



செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டமன்றத்தில் வேளாண்மை மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இன்று ஐந்தாவது முறையாக வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்துள்ளார். இந்த வேளாண் பட்ஜெட் தயாரிக்கும் முன்பு விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளிடம் கருத்துக் கேட்பு கூட்டங்களை நடத்தி, கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் கேட்டிருக்கிறார். இந்த ஜனநாயக பண்பு வரவேற்கத்தக்கது. இது தொடர வேண்டும்.

கடந்த ஆண்டு (2024 25) 1.81 லட்சம் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு பெற்றுள்ள விபரத்தை கூறும் அறிக்கை உடனடியாக மின் இணைப்பு வழங்க முடியாத 1000 விவசாய கிணறுகளுக்கு சூரிய மின்சக்தி மின் மோட்டர் அமைத்து தருவதற்கு நிதியொதுக்கம் செய்துள்ளது. சிறு தானிய இயக்கம், எண்ணெய் வித்துக்கள் இயக்கம் போன்றவற்றுடன் முந்திரி வாரியம் அமைத்திருப்பதும், மானாவாரி பகுதிகளில் கோடை உழவு செய்ய ஹெக்டேருக்கு தலா ரூ.2000 மானியம் வழங்குவது, பண்ணைக் குட்டைகள் அமைப்பது போன்ற பல்வேறு திட்டங்களும் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவும்.

உணவுப் பொருட்கள் விளையும் வயலில் இருந்து நுகர்வோர் இல்லங்களுக்கு செல்லும் வகையில் உழவர் சந்தை திறக்கப்பட்டது. இதனை மேலும் விரிவுபடுத்த இணைய வழி கேட்பு மூலம் நுகர்வோர் வீடுகளுக்கு வழங்கும் புதிய திட்டம் உழவர் சந்தை வணிகத்தை வலுப்படுத்தும். வேளாண் விஞ்ஞானி முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் ஆய்வு திட்டம் பொருத்தமானது.

சாகுபடி வேலைகள் எந்திரமயமாகிவரும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு விவசாயப் பணிக்கான எந்திர மையங்கள் அமைப்பது. எந்திரங்கள் வாங்க மானியம் வழங்குவது, ஆயிரம் மையங்களில் முதல்வர் உழவர் நல சேவை மையங்கள் அமைப்பது போன்றவைகள் சாகுபடி பணிகள் சுணக்கமில்லாது நடைபெற உதவும். முதல்வர் உழவர் பாதுகாப்பு திட்டத்தை கைவிட்டு கருணாநிதி ஆட்சியில் 1999 ஆம் ஆண்டில் அமைத்த தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது.

இந்த நிலையில், முதல்வர் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் வழங்கப்படும் நலத்திட்ட உதவித் தொகைகள் உயர்த்துப்பட்டுள்ளன. விபத்து மரணத்திற்கு தலா 5 லட்சமாகவும், இயற்கை மரணத்திற்கு தலா ரூ.3 லட்சமாகவும் நிவாரணம் இருக்க வேண்டும் என்பதும், உழவர் பாதுகாப்பு திட்ட அட்டையில் உள்ள முதன்மை உறுப்பினர்களுடன், சார்பு உறுப்பினர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை விரிவு படுத்த வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளையும் பரிசீலித்திருக்கலாம்.

கரும்புக்கு ஊக்கத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. மலர் சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முன்னோடி விவசாயிகளை ஜப்பான், சீனா, வியட்நாம் போன்ற நாடுகளுக்கு அழைத்து சென்று, அனுபவத்தை பகிர்ந்து கொள்ள உறுதியளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் மன நிறைவு கொள்ளும் வேளாண் பட்ஜெட்டாக அமைந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

### உதயநிதி பாராட்டு

உழவர் பெருமக்கள் மகிழும் வகையில் சுமார் ரூ.45,661 கோடி அளவுக்கு நம் திராவிட மாடல் அரசின் வேளாண்மை பட்ஜெட் அமைந்துள்ளதில் மகிழ்ச்சி கொள்கிறேன் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேளாண் பட்ஜெட் குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாட்டு வேளாண் பெருங்குடி மக்களையும் வேளாண்மையையும் புதிய உயரங்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில்



முதல்வர் மு.க. ஸ்டாலினின் வழிகாட்டுதலின்படி, வேளாண் நிதிநிலை அறிக்கை 2025 2026 சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

கிராமப்புற வேளாண் பட்டதாரி இளைஞர்களை கொண்ட முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், நெல் சாகுபடி பரப்பளவை உயர்த்த சிறப்புத் திட்டம், மழைவாழ் உழவர்கள் முன்னேற்றம், உழவர் சந்தைகளில் இருந்து ஆன்லைன் முறையில் பொருட்களை டெலிவரி செய்யவும் தனித்திட்டம், உழவரைத் தேடி வேளாண்மைத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், கூட்டுறவு பயிர்க்கடன் குறுகிய காலக்கடன் வழங்க என ரூ.20,500 கோடி இலக்கு, வேளாண் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க, டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி... இப்படி உழவர் பெருமக்கள் மகிழும் வகையில் சுமார் ரூ.45,661 கோடி அளவுக்கு நம் திராவிட மாடல் அரசின் வேளாண்மை பட்ஜெட் அமைந்துள்ளதில் மகிழ்ச்சி கொள்கிறோம். உழவர் வாழ்வு செழிக்கட்டும்! வேளாண்மைத்துறையிலும் தமிழ்நாட்டின் சாதனைகள் தொடரட்டும்" என்று கூறியுள்ளார்.

### "பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை

"இன்றைய வேளாண் பட்ஜெட்டில், பயிர்க் கடன் ரூ.1,774 கோடி இன்னும் தள்ளுபடி செய்யப்படவில்லை என்பது தெளிவாகக்



குறிப்பிடப்பட்டிருக்கிறது. வெறும் பொய்யிலும் புரட்டிலும் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறது திமுக அரசு" என்று அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

2025-26ம் நிதி ஆண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் உழவர் நலன் மற்றும் வேளாண்மை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இன்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்தார். இந்த பட்ஜெட் குறித்து எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன. வேளாண் பட்ஜெட் குறித்து பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில், "வேளாண் பட்ஜெட் என்ற பெயரில் பொய்யும் புரட்டுமாக ஒன்றை தாக்கல் செய்திருக்கிறது திமுக அரசு.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். திமுகவின் பட்ஜெட் மொத்தமுமே பொய்களும் புரட்டுகளுமாகத்தான் இருக்கிறது. இந்தப் பொய்களைப் பொது இடங்களில் ஒளிபரப்பினால், மக்கள் வந்து பார்ப்பார்கள் என்று யார் இவர்களிடத்தில் கூறினார்கள் என்று தெரியவில்லை. இரண்டு நாட்களாக, மக்கள் வரிப்பணத்தை வீணடித்ததுதான் மிச்சம்.

கடந்த ஆண்டு வெளியிட்ட வேளாண் பட்ஜெட்டில், 2022 2023ஆம் ஆண்டில், தமிழகத்தில் மொத்த சாகுபடிப் பரப்பு, 155 லட்சம் ஏக்கர் என்று கூறியிருந்தார்கள். இந்த ஆண்டு பட்ஜெட்டில், அது, 151 லட்சம் ஏக்கராக உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். சாகுபடிப் பரப்பு, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 4 லட்சம் ஏக்கர் குறைந்திருக்கிறது என்பது தான் உண்மை. ஆனால், அதை மறைக்க, நான்கு ஆண்டுகளுக்கு முன்புள்ள 2019 2020 சாகுபடிப் பரப்பை விட இந்த ஆண்டு உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன்? தமிழக மக்களை எத்தனை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது திமுக?

பயிர்க் கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படவில்லை என்று கடந்த பிப்ரவரி மாதம் நாங்கள் கூறியபோது, கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் வந்து அம்புலிமாமா கதைகளைக் கூறிச் சென்றார். இன்றைய வேளாண் பட்ஜெட்டில், பயிர்க் கடன் ரூ.1,774 கோடி இன்னும் தள்ளுபடி செய்யப்படவில்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வெறும் பொய்யிலும் புரட்டிலும் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறது திமுக அரசு. திமுக அமைச்சர்களுக்கு, இப்படிக் கூசாமல் பொய் சொல்ல வெட்கமாகவே இருக்காதா?

நெல்லுக்கு ரூ.2,500, கரும்புக்கு ரூ.4,000 குறைந்தபட்ச ஆதார விலை என்ற வாக்குறுதி எல்லாம் வெறும் பேச்சளவிலேயே போய்விட்டது. விவசாயிகளைத் தொடர்ந்து வஞ்சித்து வருவதையே வேலையாக வைத்திருக்கும் திமுக அரசின் இந்த வேளாண் பட்ஜெட், வெறும் காகிதக் குவியலே தவிர வேறொன்றுமில்லை" என விமர்சித்துள்ளார்.

# அவரிடமே கேளுங்கள்... செங்கோட்டையன் 'தவிர்ப்பு' விவகாரத்தில் இபிஎஸ் கொந்தளிப்பு

சென்னை, மார்ச்.16

"என்னை சந்திப்பதை ஏன் தவிர்த்தார் என்பது குறித்து அவரிடமே சென்று கேளுங்கள். தனிப்பட்ட முறையில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை எல்லாம் இங்கே பேசாதீர்கள்" என்று செங்கோட்டையன் குறித்த கேள்விக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கொந்தளிப்புடன் பதில் அளித்துள்ளார்.

202526ம் நிதி ஆண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் உழவர் நலன் மற்றும் வேளாண்மை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். பேரவைக் கூட்டத்துக்கு முன்னர் அதிமுக எம்எல்ஏ செங்கோட்டையன், சபாநாயகர் அப்பாவுவைச் சந்தித்தார். அவர் அதிமுக பொதுச் செயலாளர் தலைமையில் நடந்த அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் குழு ஆலோசனையில் கடந்த இரண்டு நாட்களாக கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில், பட்ஜெட் தாக்கலுக்குப் பின்னர் செய்தியாளர்களை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்தித்தார். அப்போது அவரிடம், அதிமுக எம்எல்ஏ செங்கோட்டையன் கடந்த இரு தினங்களாக உங்களைச் சந்திப்பதை தவிர்ப்பதற்கான காரணம் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "அதை





அவரிடம் கேளுங்கள். காரணம், அவரைக் கேட்டால்தானே தெரியும்?! என்னை சந்திப்பதை அவர் ஏன் தவிர்த்தார் என்பது குறித்து அவரிடம் சென்று கேளுங்கள். இதெல்லாம் இங்கே கேட்கவேண்டிய கேள்வி இல்லை. தனிப்பட்ட முறையில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை எல்லாம் இங்கே பேசாதீர்கள்.

அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களில் இன்று சிலர் வரவில்லை. அவர்களுக்கு வேலை இருக்கும். அதிமுக சுதந்திரமாக செயல்படுகின்ற கட்சி. திமுக போல அடிமை ஆட்கள் இங்கு கிடையாது. நான் திருமணத்துக்குச் செல்கிறேன், அதில் அவர் கலந்துகொள்ளவில்லை, இவர் கலந்துகொள்ளவில்லை என்று செய்தி வெளியிடுகிறீர்கள். என்றைக்குமே நான் யாரையும் எதிர்பார்த்தது கிடையாது.

நான் ஒரு சாதாரண தொண்டன். தலைவன் கிடையாது. திமுக போல வாரிசு அரசியல் இங்கு கிடையாது. அதிமுக குடும்பக் கட்சி கிடையாது. சர்வாதிகார ஆட்சியும் கிடையாது. அதிமுகவில் சுதந்திரமாக அனைவரும் செயல்படலாம். எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் போகலாம். யாரையும் கேட்பதற்கில்லை. எங்களுக்கு ஒரே எதிரி திமுக தான். மற்ற கட்சிகள் எல்லாம் எங்களுக்கு எதிரியே கிடையாது.

அதிமுகவில் இருக்கும் உறுப்பினர்கள் சுதந்திரமாக செயல்படுகின்றனர். அதற்கு எந்த தடையும் கிடையாது. எந்தக் கட்சியிலும் இப்படிப்பட்ட சுதந்திரம் கொடுக்கவில்லை. அதிமுக மட்டும்தான் இத்தகைய சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. காரணம் நாங்கள் எல்லாம் ஒன்றாக இருந்து பணியாற்றியவர்கள்" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

2025-26 ஆம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் வெள்ளிக்கிழமை தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்றது. அந்த கூட்டத்துக்கு முன்னதாக அதிமுக எம்.எல்.ஏக்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அறையில் ஆலோசனையில் ஈடுபட்டனர். அந்தக் கூட்டத்தில் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், சட்டப்பேரவையில் தமிழக வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு முன்பாக, அதிமுக எம்எல்ஏ செங்கோட்டையன், சபாநாயகர் அப்பாவுவை அவரது அறையில் தனியாக சந்தித்துப் பேசினார். மேலும், சட்டப்பேரவைக் கூட்டத்துக்கு அவர் வழக்கமாக வருகைதரும் வழியாக இல்லாமல் கடந்த இரு நாட்களாக வேறு நுழைவாயில் பகுதியாக சட்டப்பேரவைக் வருகைகு தந்தார்.

அத்திக்கடவு அவிநாசி திட்டம் நிறைவேற்றக் காரணமாக இருந்ததாக முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான பழனிசாமிக்கு, அத்திக்கடவு அவிநாசி திட்டக் கூட்டமைப்பினர் சார்பில் கோவை மாவட்டம் அன்னூர் கஞ்சப்பள்ளி பகுதியில் பிப்.9ம் தேதி பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்காதது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதுகுறித்து அப்போது அவர், "அத்திக்கடவு அவிநாசி திட்ட விழாவை புறக்கணிக்கிறேன் என்பதைக் காட்டிலும், என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறேன்" என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.

# 100 நாள் வேலைத் திட்ட ஊதியத்தை உயர்த்த நிலைக்குழு பரிந்துரை! ப.சிதம்பரம் வரவேற்பு

புதுடெல்லி, மார்ச்.16

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் பணியாற்றுபவர்களுக்கான ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்ற நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரை மகிழ்ச்சி அளிப்பதாக ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

விலைவாசி அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (விநிழிஸிணிநிஷி) கீழ் ஊதியங்களை திருத்த வேண்டும் என்று கிராமப்புற மேம்பாட்டுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கை கடந்த புதன்கிழமை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

காங்கிரஸ் எம்.பி. சப்தகிரி சங்கர் உலகா தலைமையிலான இக்குழு, "விவசாயத் தொழிலாளர்களுக்கான ஊதியங்கள் தற்போது நுகர்வோர் விலைக்குறியீட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த குறியீடு பணவீக்கத்தின் தாக்கத்தை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. எனவே, அடிப்படை மட்டத்தில் உண்மையான பொருளாதார நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஊதியக் கணக்கீட்டு முறையை முன்னுரிமை



அடிப்படையில் மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க வேண்டும்" என்று பரிந்துரைத்துள்ளது.

வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் மாநிலங்களுக்கு இடையே ஊதிய முரண்பாடு இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள நிலைக்குழு, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் சீரான ஊதிய விகிதத்தை செயல்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரை மகிழ்ச்சி அளிப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் நிதி அமைச்சருமான ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "202526 பட்ஜெட் மீதான விவாதத்தின்போது, பணவீக்கம் மற்றும் விலைவாசியை பிரதிபலிக்கும் வகையில் 100 நாள் வேலைத் திட்ட தொழிலாளர்களின் ஒரு நாள் ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று நான் கோரியிருந்தேன்.

எனது இந்த கோரிக்கைக்கு நிதியமைச்சர் பதிலளிக்கவில்லை. இந்த திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு தற்போதைய ஊதியம் களத்தில் உள்ள உண்மையான பொருளாதார நிலைமைகளைப் பிரதிபலிக்க வேண்டும் என்று கிராமப்புற மேம்பாட்டுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நிதியமைச்சர் விழித்தெழுந்து ஏழைகளில் ஏழைகளாக இருப்பவர்களின் துயரத்தைப் புரிந்துகொள்வார் என்று நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## தாம்பரம் மாநகர திமுக சார்பில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி தலைமையில் மகளிர் தின விழா



தாம்பரம் மார்ச் 16

தாம்பரம் மாநகர திமுக சார்பில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி தலைமையில் மகளிர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

தாம்பரம் மாநகர திமுக மகளிர் அணி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் மேற்கு தாம்பரம் அம்பேத்கர் திருமண மண்டபத்தில் மாநகர கழக துணைச் செயலாளர் மேயர் க.வசந்தகுமாரி கமலக் கண்ணன் அவர்கள் தலைமையிலும் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் வரவேற்பில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாண்புமிகு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

உடன் துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், பகுதி கழக செயலாளர்கள் இரா.சுரேஷ், ஆ.நடராஜன் மற்றும் 70வார்டு மகளிர்களும், கழக நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் பகுதி துணை செயலாளர் லிங்கேஸ் வரிபாபு நன்றி உரையாற்றினார்..




தமிழக முதல்வர் தேர்தல் வாக்குறுதி 315ன் படி சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர்களுக்கு குறைந்தபட்ச காலம் வரை ஊதியம் வழங்க வேண்டி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகம் மயில் கேட் முன்பாக தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில் மாநிலம் தழுவிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்டத் தலைவர் கண்ணுச்சாமி தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் மாரியப்பன் , ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் 11 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது

சிவகங்கை, மார்ச்.16

சிவகங்கை மாவட்டத்தில் 11 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 10 ரவுடிகள் மற்றும் 1 பாலியல் வழக்கில் ஈடுபட்ட நபர் அடங்குவர். இதில் குறிப்பிடப்படும் படியாக மேலப்பிடாவூரைச் சேர்ந்த அய்யாசாமி என்ற கல்லூரி மாணவனை தாக்கிய நபர்களில் இருவர் மீது குண்டர் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## கொல்லங்கோடு பத்திரகாளி அம்மன் கோவில் தூக்கத் திருவிழா: கேரள ஆளுநர் பங்கேற்பு




கன்னியாகுமரி, மார்ச்.16

கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோட்டில் புகழ்பெற்ற ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் மீனபரணி தூக்கத் திருவிழா வரும் 23ம் தேதி தொடங்கவுள்ளது. இந்த விழாவை கேரளா ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தொடங்கி வைக்கிறார்.10 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவின் இறுதி நிகழ்ச்சியான வரலாற்று சிறப்புமிக்க தூக்க நேர்ச்சை ஏப்ரல் 1ம் தேதி நடைபெறுகிறது. தூக்க நேர்சையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர். கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாகிகள் நேற்று தெரிவித்தனர்..




தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை சார்பாக மாபெரும் இப்தார் நிகழ்ச்சி வருகின்ற 170325 சென்னை எக்மோர் ஃபைஸ் மஹால், நடைபெற உள்ளது, காங்கிரஸ் மாநில தலைவரும் சட்டமன்ற உறுப்பினர் செல்வப் பெருந்தகை ,காங்கிரஸ் கட்சியின் மூத்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் இந்திய கூட்டணி கட்சிகளின் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்கின்றார்கள்,இந்த நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை தலைவர் பி.முகமது ஆரிப் அழைப்பு விடுத்துள்ளார்..

## தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 26 வது பட்டமளிப்பு விழா






பெரியகுளம் மார்ச் 16

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுபட்டியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 26 வது ஆண்டு பட்டமளிப்பு விழா இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமையில் நடைபெற்றது.உபதலைவர் கணேஷ்,பொதுச் செயலாளர் ஆனந்தவேல்,பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி பாரி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கல்லூரி செயலாளர் காசி பிரபு,இணைச் செயலாளர்கள் அருண் ,செண்பகராஜன்,அகடமிக் டீன் முனைவர் கோமதி,சி ஓ இ முனைவர் சரண்யா,துணை முதல்வர்கள் சுசிலா சங்கர், முனைவர் உமா காந்தி, முனைவர் கிருஷ்ணவேணி, விடுதி காப்பாளர் உமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக தேர்வில் முதலிடம் பெற்ற 16 மாணவிகளுக்கு தங்கப்பதக்கமும்,இரண்டாம் இடம் பிடித்த13 மாணவிகளுக்கு பதக்கமும்,800 மாணவிகளுக்கு பட்டமளிப்பும் வழங்கி சிறப்பு செய்தனர்.

## குன்னூர் ராணுவ குடியிருப்பு பகுதியில் ஹோலி பண்டிகை கொண்டாட்டம்

குன்னூர், மார்ச்16

ஹோலி என்பது ஒரு துடிப்பான திருவிழாவாகும். இது தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றியையும், கிருஷ்ணருக்கும் ராதாவுக்கும் இடையிலான தெய்வீக அன்பையும் வெளிப்படுத்தும் விதமாக ஹோலி கொண்டாடுகிறது. இது வசந்த காலத்தின் வருகையையும் குளிர்காலத்தின் முடிவையும் குறிக்கிறது,

ஹோலியின் வண்ணமயமான கொண்டா ட்டங்களுக்குப் ஹோலி ஆழமான கலாச்சார மற்றும் புராண முக்கியத்துவத்தைக் கொண் டுள்ளது, வண்ணங்களைப் பயன்படுத்துவதற்கான பாரம்பரியத்தைக் குறிக்கிறது.

ஒற்றுமையின் பண்டிகையாக, ஹோலி சமூக தடைகளை உடைத்து, சாதி, இனம் அல்லது அந்தஸ்தைப் பொருட் படுத்தாமல் மக்களை ஒன்றிணைந்து வட மாநிலங் களில் கோலாகலமாக கொண்டாடப் பட்டு வருகிறது.



இதேபோன்று நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வெலிங்டன் ராணுவ முகாம் குடியிருப்பு பகுதிகளில் ஹோலி பண்டிகை வயது வித்தியாசம் இல்லாமல் வயது வித்தியாசம் இல்லாமல், அனைத்து சமுதாய மக்களும் ஒன்றிணைந்து பல்வேறு வண்ணப் பொடிகளை தூவியும், தண்ணீரை பீச்சி அடித்தும் கொண்டாடினர். இது மட்டுமில்லாமல் அனைவரும் வயது வித்தியாசம் இல்லாமல் ஒன்றாக இணைந்து பாடல்களுக்கு ஏற்றவாறு நடனமாடி கோலாகலமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஹோலி பண்டிகையை கொண்டாடினர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 48வது வார்டுக்குட்பட்ட புத்தன் குடியிருப்பு பகுதியில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் பொது கழிவறை பராமரிப்பு பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். மேலும் மழைநீர் வடிகால் மறுசீரமைப்பு பற்றி ஆய்வு செய்தார். உடன் மாமன்ற உறுப்பினர் பியாஷா ஹாஜி பாபு மாநகர செயலாளர் ஆனந்த்,வட்ட செயலாளர் திரு.அன்சாரி மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் .ஹாஜி பாபு,வட்ட பிரதிநிதிகள் ஹாஜி அலி. ராஜதுரை மற்றும் தி மு க நிர்வாகிகள் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டம்,காரைக்குடியில் கொலை செய்ய திட்டம் தீட்டிய கூலிப்படையினர் நான்கு பேர் கைது

காரைக்குடி மார்ச் 16





சிவகங்கை மாவட்டம் காரைக்குடி உட்கோட்ட போலீசார் ரகசிய தகவலின் அடிப்படையில் பள்ளத்தூர் கோட்டையூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் திடீர் சோதனை நடத்தினர். இதில், கொலைக்காக ஆயுதங்களை வைத்திருந்த நான்கு பேரை கைது செய்தனர். விசாரணையில், இவர்கள் காரைக்குடி பகுதியில் மார்ச் 18 அன்று நடைபெறவுள்ள முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவில் பழிவாங்கும் நோக்கில் ஒரு கொலை செய்ய திட்டமிட்டிருந்தது கூலிப்படையினர் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட வர்கள்:1. அகிலன் (23), காரைக்குடி ,2. பாண்டியன் (25), புதுக்கோட்டை ,3. விஸ்வநாதன் (20), காரைக்குடி ,4. வெங்கடேசன் (26), காரைக்குடி கொலைத் திட்டத்தின் பின்னணி இந்த கொலைத் திட்டம் 2019 ஆம் ஆண்டு குன்றக்குடியில் நடந்த கொலை வழக்குடன் தொடர்புடையது. 2019 ல் ஆறு பேர் கொண்ட கும்பல் குன்றக்குடியில் ஒரு நபரை கொலை செய்தது.இதனால் கொலை செய்யப்பட்ட நபரின் நெருங்கிய நண்பரான பாண்டி, பழிவாங்கும் நோக்கில் அந்த கொலை குற்ற வழக்கின் எதிரிகளை கொல்ல ஒரு குழுவை அமைத்துள்ளார். இவர்களை போலீசார் ரகசிய தகவலின் பேரில் கைது செய்துள்ளனர்.

காவல்துறையின் வேகமான நடவடிக்கை காரணமாக, கோவில் திருவிழாவில் நடத்த திட்டமிடப்பட்ட ஒரு கொலை சம்பவம் தடுக்கப்பட்டது. மேலும், இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களை பிடிக்க சிறப்பு போலீஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் தெரிவிக்கையில் “பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது மேலும் சட்டம் ஒழுங்கை பாதிக்கும் செயல்களில் ஈடுபடும் நபர்களின் மீது கடுமையான நடவடிக்கை பாயும் என தெரிவித்துள்ளார்.

## அரிமண்டபம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் ஆண்டு விழா



மானாமதுரை மார்ச் 16

அரிமண்டபம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.


சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் அரிமண்டபம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் ஆண்டு விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் ராஜேஸ்வரி மற்றும் ஆசிரியர் உமா ஆகியோரின் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் பள்ளிக் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவிகளின் ஆடல், பாடல், நடனம், நாடகம் மற்றும் கலை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இப்பள்ளி ஆண்டு விழாவின் இறுதியில் சிறப்பான முறையில் தங்களது தனி திறமைகளை வெளிப்படுத்திய பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்கள், சிறப்பு விருந்தினர்கள், ஆசிரிய பெருமக்கள், பள்ளி குழந்தைகள் மற்றும் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் கிராம பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசை கண்டித்து கோத்தகிரியில் கண்டன பொதுக்கூட்டம்



கோத்தகிரி, மார்ச்.16

ஒன்றிய அரசை கண்டித்து கோத்தகிரியில் கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்படுட்ம என்று திமுக மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது, தமிழகத்தை வஞ்சித்து புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியை திணிக்க முயலும் ஒன்றிய அரசை கண்டித்து கசக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் கோத்தகிரி மார்க்கெட் திடல் பகுதியில் கண்டனஆர்ப்பாட்டம் நேற்று (15/03/25) சனிக்கிழமை மாலை 3 மணி அளவில் நீலகிரி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி அடுத்த வள்ளிமலை ஸ்ரீ சுப்பிரமணிய திருக்கோயிலில் பிரமோற்சவத்தின் இறுதி நாளான 14ம் தேதி வெள்ளிக்கிழமை முருகன் வள்ளி திருமண திருக்கல்யாண வைபவம் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திராளான பக்தர்கள் கலந்து கொண்டு பகவானின் திருக்கலயாணத்தை கண்டுகளித்தனர். இவ்விழா ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் திருநாவுக்கரசு, எழுத்தர் ராஜ்குமார், கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## செம்பாக்கத்தில் ஸ்ரீ சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கம் சார்பில் விழிப்புணர்வு பேரணி




செம்பாக்கம் மார்ச் 16

செம்பாக்கத்தில் ஸ்ரீ சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கம் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பாக தாம்பரம் மாநகராட்சி உள்ள செம்பாகம் ஏரியை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என்று செம்பாக்கம் ஏரி பாதுகாப்பு குழு சார்பில் நேற்று செம்பாக்கம் ஸ்ரீ சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கம் சார்பில் காலை 7 மணி அளவில் சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கத்தின் செயலாளர் எம்.ரவி தலைமையில் நடைப்பயணத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர் சங்கத்தின் தலைவர் எஸ் மோகன், சரஸ்வதி காலனி குடியிருப்போர் நல சங்கத்தின் தலைவர் காரை எஸ்.செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் கலந்துகொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்தனர் இதில் 43வது மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன், 38வது மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரவீரன், 44வது மாமன்ற உறுப்பினர் ராஜா, தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், நல சங்கங்கள், செம்பாக்கம் ஏரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக செம்பாக்கம் ஏரி மற்றும் அதனை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி வழியாக மேளதாளம் முழுக்கத்துடன் ஏரிகளை பாதுகாப்போம் ஏரிகளில் குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவோம், போன்ற வாசகம் அடங்கிய அட்டைகள் ஏந்தி கொண்டு கோஷங்கள் எழுப்பியவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் சமூக ஆர்வலர் கலந்துகொண்டு ஏரிகளை எப்படி பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கம் நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## பாண்டியன் சரஸ்வதி கல்லூரியில் வணிக கணினி பயன்பாடு வணிக மேலாண்மை துறை சார்பில் தேசிய கருத்தரங்கு




சிவகங்கை மார்ச் 16

பாண்டியன் சரஸ்வதி கல்லூரியில் வணிக கணினி பயன்பாடு மற்றும் வணிக மேலாண்மை துறை சார்பில் தேசிய கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது .

சிவகங்கை மாவட்டம் அரசனூர் பாண்டியன் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிக கணினி பயன்பாடு மற்றும் வணிக மேலாண்மை துறை சார்பில் வணிகவியல் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியை

மதுபாலா வரவேற்பு உரையாற்றினார், வணிகவியல் கணினி பயன்பாடு துறை தலைவர் தங்கப்பாண்டி கருத்தரங்கு தொடக்க உரையாற்றினார். கல்லூரியின் நிறுவனர் மற்றும் செயலர் இந்து ரத்தன் மலேசியா பாண்டியன் தலைமை வகித்தார். கல்லூரி நிர்வாக இயக்குனர் பொறியாளர் வரதராஜன் சிறப்புரையாற்றினார். பாண்டியன் சரஸ்வதி பொறி யியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ரவீந்திரன் மற்றும் பாண்டியன் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் கண்ணன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக தலைவர் பிரபு ராம் ராமசாமி செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டு நெறிமுறைகளை குறித்து மாணவர்களிடம் விளக்கிப் பேசினார். அதனைத் தொடர்ந்து மன்னர் துரை சிங்கம் அரசு கலைக்கல்லூரி வணிகவியல் துறை இணை பேராசிரியர் முனைவர் செண்பகநாதன் நவீன வணிகத்தில் நுண்ணறிவின் முன்னேற்றங்கள் குறித்து பேசினார். இந்துஸ்தான் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி உதவி பேராசிரியர் ராம்கி செயற்கை நுண்ணறிவின் புதுமையான நடைமுறைகளை குறித்து பேசினார். வணிக மேலாண்மை துறை தலைவர் முனைவர்

பொன் முத்துராமலிங்கம் நன்றி உரையாற்றினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாண்டியன் சரஸ்வதி கலைக்கல்லூரி வணிக கணினி பயன்பாடு மற்றும் வணிக மேலாண்மை துறை சார்ந்த உதவி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் ஏற்பாடு செய்திருந்தனர்..

## தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் சமுதாய வளைகாப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் பங்கேற்பு



தென்காசி மார்ச் 16.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி முத்து கிருஷ்ணாபுரம் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் இது பற்றிய விபரம் ஆவது தமிழக அரசு சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடையநல்லூரில் 100 பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடத்தப்பட்டது சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வு இன்றி அனைவருக்கும் இது போன்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தி தந்திட வேண்டும் என்பதற்காக தமிழக அரசின் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது ஒவ்வொரு கர்ப்பிணியும் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க கர்ப்ப காலத்தில் கடைபிடிக்க வேண்டிய சுகாதார முறை ஊட்டச்சத்து உணவு முறை மருத்துவ பரிசோதனைகளின் அவசியத்தை தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டது 100 கர்ப்பிணி பெண்களுக்கு ஆறு வகையான சாப்பாடு லெமன் ஜூஸ் மற்றும் சுண்டல் ஸ்னாக்ஸ் ஆகியவையும் சில்வர் தாம்பளம் வெற்றிலை பாக்கு வாழைப்பழம் கொய்யாப்பழம் நெல்லிக்காய் தேங்காய் மற்றும் பித்தளையில் குங்குமச்சிமிழ் குங்குமம் , ஜாக்கெட் பிட் , முறுக்கு ஆகியவையும் வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் தலைமை தாங்கி கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்தும் சீர் பொருட்கள் வழங்கியும் ஆசீர்வதித்தார்

மேலும் கர்ப்பிணி பெண்களுக்கு தமிழக அரசு வழங்கும் 18 ஆயிரம் ரூபாய் பற்றிய விழிப்புணர்வு மருத்துவர்களின் ஆலோசனை ஸ்கேன் எடுப்பது போன்ற பல வகையான விளக்கங்களை கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கினார் சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சியில் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சுப்பம்மாள் பால்ராஜ் துணைத்தலைவர் ஐவேந்திரன் தினேஷ் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முருகன் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் பெரியோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பரக்கத் சுல்தானா தலைமையில் கண்காணிப்பாளர்கள் சிவகாமி மகேஸ்வரி ஆகியோர் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.

## செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட செயலாளருக்கு தாம்பரத்தில் தமிழக வெற்றி கழகத்தினர் உற்சாக வரவேற்பு



தாம்பரம் மார்ச் 16

சென்னை பனையூரில் உள்ள தமிழக வெற்றி கழக தலைமை அலுவலகத்தில் 6 ம் கட்டமாக 19 மாவட்ட செயலாளர் பதவி அறிவிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட செயலாளராக டி.கில்லி சரத் என்பவருக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது.. அதனைத் தொடர்ந்து பனையூரில் இருந்து தாம்பரம் வந்த அவருக்கு த வே கா வினர் மேளதாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்..

தாம்பரம் பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்க வடமேற்கு மாவட்ட செயலாளராக பதவி பெற்ற கில்லி சரத் உள்ளிட்ட 300க்கு மேற்பட்ட த வெ கவினர் திரண்டனர் இதனால் தாம்பரம் பேருந்து நிலையம் பகுதியில் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இதன் காரணமாக தாம்பரம் ஜிஎஸ்டி சாலையில் சிறிது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் மெதுவாக நகர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது

போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவித்த ஆம்புலன்ஸ் இருக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் உடனடியாக வாகனங்களை அப்புறப்படுத்தி ஆம்புலன்ஸ் விரைந்து செல்வதற்கு வழி ஏற்படுத்தி கொடுத்தனர்.. அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்த தமிழக வெற்றி கழகத்தினர் ஊர்வலமாக அங்கிருந்து புறப்பட்டு சென்றனர். அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்க ஏராளமான தொண்டர்கள் குவிந்ததால் தாம்பரம் பேருந்து நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. வாகன நெரிசலில் சிக்கிக்கொண்ட ஆம்புலன்ஸ் களத்தில் இறங்கிய காவல்துறையினர் உடனடியாக வாகனங்களை அப்புறப்படுத்தி ஆம்புலன்ஸ் செல்வதற்கு வழி ஏற்பாடு செய்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பண்ணைக் காடு பேரூராட்சியில் தடைசெய்யப்பட்ட நெகிழிகளை முற்றிலும் ஒழிப்பது குறித்த ஆய்வு மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ப் உதவிய இயக்குனர் ஊராட்சிகள் நாகராஜன் பேரூராட்சி செயல் அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டனர்.




தேனி மாவட்டம் வருசநாட்டில் கடமலை மயிலை ஒன்றிய தோட்டக்கலை வேளாண்மை துறையின் சார்பாக பொதுமக்களுக்கு இலவசமாக மா, பப்பாளி, சப்போட்டா, கருவேப்பிலை என பல வகையான மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினர் இதில் மூங்கில் அறக்கட்டளை நிறுவனர் ரமணி, இயக்குனர் செயலாளர் வேலுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கினர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடான வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது.உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மகாராஜ் தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் பக்தவச்சலம் ஆகியோர் உள்ளனர்.




மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நான் காம் ஆண்டு மாணவிகள் கிராம தங்கல் திட்டம் மற்றும் கிராமப்புற அனுபவத்திட்டத்தின் கீழ் வாடிப்பட்டி பகுதியில் தங்கி பல்வேறு களப்பயிற்சி பெற்று வருகின்றனர். அதில் உலக நுகர்வோர் தின விழிப்புணர்வு பேரணி கட்ட குளம் ஊராட்சியில் நடத்தினர். இந்த பேரணியை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ரேவதி தலைமை தாங்கி தொடக்கி வைத்தார். இதில் மாணவிகள் கீர்த்தனா, கீர்த்தனா தேவி, கீர்த்தனா ஸ்ரீ, கீர்த்திஸ்வரி, கீர்த்தி கிருபாஷினி, கோமளவள்ளி, கிருஷ்ணவேணி, லட்சுமி கணேஸ்வரி ஆகியோர் மாணவ மாணவிகளுடன் பேரணியாக சென்றுவீதியோர நாடகம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.







திண்டுக்கல் மாவட்டம் பழனி ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையம் நகராட்சிக்கு செலுத்தவேண்டிய குடிநீர் வரி, சொத்துவரி ஆகியவை நீண்ட நாட்களாக செலுத்தப்படாமல் இருந்துள்ளது. இதன்காரணமாக கடந்த 2017ம் ஆண்டுமுதல் 20242025ம் நிதியாண்டு வரையில் 71லட்சம் ரூபாய் வரிபாக்கி வைத்துள்ளனர். இதையடுத்து வரி பாக்கியை செலுத்த வலியுறுத்தி பழனி நகராட்சி சார்பில் பலமுறை நோட்டீஸ் வழங்கியும் மருத்துவமனை நிர்வாகம் செலுத்தாமல் அலட்சியமாக இருந்ததாக தெரிகிறது. இந்நிலையில் 202425ம் ஆண்டு நிதியாண்டு முடிவடைய உள்ள நிலையில் நகராட்சிக்கு சொலுத்தவேண்டிய 71லட்சம் ரூபாய் வரிபாக்கியை செலுத்தாத மருத்துவமனை நகராட்சி சார்பில் ஜப்தி நோட்டிஸ் வழங்கப்பட்டது மருத்துவமனை அலுவலகத்திற்கு நகராட்சி பொறியாளர் ராஜவேல் தலைமையிலான நகராட்சி அதிகாரிகள் நேரில் சென்று ஜப்தி நோட்டீசை வழங்கினர். இதுவரை வரி செலுத்தாதால் அந்நிறுவனத்தின் சொத்துகளை ஜப்தி செய்ய நகராட்சி அதிகாரிகள் ஜப்தி நோட்டீஸ் வழங்கி, ஜப்தி செய்ய நகராட்சி வாகனம், துப்புரவு பணியாளர்கள் உள்ளிட்டோருடன் மருத்துவமனை முன்பு குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

## கம்பம் நகர மன்ற கூட்டத்தில் 26 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றம்





கம்பம் மார்ச் 16:

தேனி மாவட்டம் கம்பம் நகர மன்ற கூட்டம் அரங்கில்நடைபெற்றது.

தலைவர் வனிதா நெப்போலியன் தலைமை தாங்கினார் துணை தலைவர் சுனோதா செல்வகுமார் முன்னிலை வகித்தார் கூட்டத்தில் மொத்தம் 26 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. முன்னதாக நகர் மன்ற திமுக உறுப்பினர் ஏ. சாதிக்அலி பேசியது ரம்ஜான் பண்டிகை காலமாக இருப்பதால் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் நகருக்குள் விநியோகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அதிமுக உறுப்பினர் வாசு செந்தில்குமார் கூறும் போது உழவர் சந்தை பகுதிகளில் சுற்றி கடைகள் அதிகமாக போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.

ஆம்புலன்ஸ் வாகனம் செல்ல முடியாமலும் , பள்ளி மாணவ, மாணவிகள் செல்வதற்கு இடையூறாகவும் இருப்பதால் நகராட்சி கட்டிடப்பிரிவு அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். கூட்டத்தில் 33 வார்டு உறுப்பினர் கலந்து கொண்டனர்.

## ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியில் பணி நிறைவு பாராட்டு விழா




பெரியகுளம் மார்ச்.16

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தாமரைக்குளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியில் கல்லூரி முதல்வர் ஜேசுராணி மற்றும் பேராசிரியர் ஆகியோரின் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவிற்கு கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டாளர் இருதய லூர்து கிளாடிஸ் வரவேற்புரையாற்றினார். கல்லூரி செயலர் சாந்தா மேரி ஜோஷிற்றா, அருட்தந்தை பீட்டர் சகாயராஜ், தமிழ்த்துறை முன்னாள் தலைவர் விர்ஜின் விமலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் நூலக பொறுப்பாளர் பாத்திமா மேரி சில்வியா, விலங்கியல் துறை பேராசிரியர் மிஸ்பா சகாய ராணி ஆகியோர் பணி நிறைவு பெறுபவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தனர்.

இதில் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், பேரூராட்சி தலைவர்கள் தென்கரை நாகராஜன், தாமரைக்குளம் பால்பாண்டி, பேரூராட்சி பணி நியமன குழு தலைவர் பாலாமணி பழனிமுருகன், தென்கரை பேரூர் செயலாளர் பாலமுருகன், பெரியார் புத்தக நிலைய அன்புக்கரசன், விலங்கியல் துறை மாணவி பாலபாண்டீஸ்வரி, தமிழ்த்துறை மாணவி ரிமா ஸ்ரீ மற்றும் தன்னார்வலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகராட்சி பகுதிகளில் அவ்வப்போது மாநகராட்சி மேயர் பணிகளை ஆய்வு மேற்கொண்டு வருவது வழக்கம் அந்த நிலைமையில் நேற்று19 வார்டு பகுதிகளில் கோல்டன் சிட்டி நகரில் குடிநீர் பிரச்சினையை நேரில் பொதுமக்களிடம் கேட்டறிந்து அவர்களுக்கு தற்போது 5000 லிட்டர் கொண்ட பெரியலாரிகளில் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் கூடிய விரைவில் சாலைகளையும் மற்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதாகவும் கூறினார் ஆய்வின் போது மாமன்ற உறுப்பினர் அல்லா பிச்சை கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் இருந்தனர்.

## திண்டுக்கல் அருகே மருதாநதி முதல் சித்தரேவு வரை தார் சாலை அமைக்க 117 லட்சம் செலவில் அமைச்சர் தலைமையில் பூமி பூஜை

வத்தலகுண்டு மார்ச்.16

திண்டுக்கல் மாவட்டம்வத்தலக்குண்டு அருகே சித்தரேவு சிறப்பு நிலை ஊராட்சியில் மருதாநதி வடக்கு வாய்க்காலில் இருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் இருந்து இன்று 117 லட்சம் மதிப்பீட்டில் மருதாநதி அணையில் இருந்து ஓரடுக்கு மெட்டல் சாலை சித்தரேவு வரை சாலை அமைக்கும் பணிக்கு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் ஊராட்சி ஒன்றிய திட்ட துணை இயக்குனர் திலகவதி. மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் பாஸ்கரன். திமுக ஆத்தூர் ஒன்றிய செயலாளர் ராமன். ஆத்தூர் ஒன்றிய முன்னாள் சேர்மன் வளர்மதி முருகேசன். திமுக மாவட்ட இளைஞரணி துணை



அமைப்பாளர் மணிகண்டன். முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மலைச்சாமி. ஊராட்சி செயல் அலுவலர் சிவராஜன் மற்றும் மணலூர் ஜெயராஜ். ஒன்றிய பிரதிநிதி அப்பளம் முருகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்...



சிவகங்கை மாவட்டம் மன்னர் துரை சிங்கம் அரசு மற்றும் கலைக்கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நேற்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை சிறப்பு வேலை வாய்ப்பு முகாமில் தேர்வான இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் வழங்கினார்.உடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மணி கணேஷ், சுபாஷினி, உதவித்திட்ட அலுவலர் மரியா, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் துரையரசன், 25ஆவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ராதா கிருஷ்ணகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161